இறுதியாண்டுத் தேர்வு தமிழ் மொழி
வகுப்பு 05 08-12-2007

பன்முகதேர்வு வினாக்கள் **Section A** வருடம்: 05

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | உழவர்களின் ஒரு திருநாள்<br>1. தீபாவளி 2. பொங்கல் 3. வருடப்பிறப்பு 4. நத்தார் | 1 | 2 | 3 | 4 |
| 2. | அவள் கோவிலுக்கு -----------<br>1. போனேன் 2. போகிறாள். 3. போனேன். 4. போனான். | 1 | 2 | 3 | 4 |
| 3. | Library என்பது<br>1. பாடசாலை 2. வீடு 3. நூலகம் 4. கோயில் | 1 | 2 | 3 | 4 |
| 4. | வெள்ளி ------- என்பது<br>1. மாதம் 2. வருடம் 3. வாரம் 4. கிழமை | 1 | 2 | 3 | 4 |
| 5. | பலகை எங்கிருந்து எடுக்கப்படுகிறது?<br>1. இரும்பு 2. மண் 3. மரம் 4. சுரங்கம் | 1 | 2 | 3 | 4 |
| 6. | வெறுப்பு என்பதன் எதிர்ச்சொல் ---------------.<br>1. விருப்பு 2. பழைய 3. பெரிய 4. செயற்கை | 1 | 2 | 3 | 4 |
| 7. | கணவனின் எதிர்ப்பால் சொல் ---------------.<br>1. மனைவி 2. அம்மா 3. அரசி 4. நடிகை | 1 | 2 | 3 | 4 |
| 8. | நானும் நீயும் சேர்ந்து பாட்டுப்<br>1. பாடுகிறாய் 2. பாடுகிறோம். 3. பாடுவேன் 4. பாடுகிறான். | 1 | 2 | 3 | 4 |
| 9. | கல்யாணம் என்பதன் ஒத்த சொல் -----------.<br>1. கொண்டாட்டம் 2. வணக்கம் 3. திருமணம் 4. கலைவிழா | 1 | 2 | 3 | 4 |
| 10. | சகோதரம் என்பது ---------------.<br>1. மாதா 2. கூட பிறந்தவர் 3. தம்பி 4. தங்கை | 1 | 2 | 3 | 4 |
| 11. | Telephone என்பது<br>1. தொலைக்காட்சி 2. வானொலி 3. தொலைபேசி 4. தொலைநோக்கி | 1 | 2 | 3 | 4 |
| 12. | ஐந்தில் வளையாதது ------------- வளையுமா?<br>1. ஐம்பதில் 2. அறுபது 3. பத்து 4. நான்கில் | 1 | 2 | 3 | 4 |
| 13. | விண் என்பதன் ஒத்த சொல் ------------.<br>1. எண் 2. வானம் 3. முகில் 4. மேகம் | 1 | 2 | 3 | 4 |
| 14. | தோற்றம் இதன் எதிர்ச்சொல் -------------.<br>1. மறைவு 2. உதிப்பு 3. இறப்பு 4. தாழ்வு | 1 | 2 | 3 | 4 |
| 15. | ஆதிகாலம் என்பது -------------.<br>1. பலகாலம் 2. கடந்தகாலம் 3. புதியகாலம் 4. பழையகாலம் | 1 | 2 | 3 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16. | ------------- புத்தகம் வாசிக்கிறார்கள்<br>1. நாங்கள் 2. நான் 3. நாம் 4. அவர்கள் | 1 | 2 | 3 | 4 |
| 17. | அந்தப் புறா அடிபட்டு கீழே ------------<br>1. விழுந்து 2. விழுந்தது 3. விழுந்த. 4. விழு. | 1 | 2 | 3 | 4 |
| 18. | வருடம் முடிவது எந்த மாதத்தில்?<br>1. தை 2. மார்கழி 3. மாசி 4. ஆடி | 1 | 2 | 3 | 4 |
| 19. | மாணவனின் எதிர்ப்பால் சொல் -------------.<br>1. தலைவி 2. சகோதரி 3. மாணவி 4. பாடகி | 1 | 2 | 3 | 4 |
| 20. | புன்சிரிப்பு என்பது<br>1. புதியசிரிப்பு 2. பலத்தசிரிப்பு 3. மென்மையானசிரிப்பு 4. ஏளனச்சிரிப்பு | 1 | 2 | 3 | 4 |
| 21. | பொங்கல்விழா வரும் மாதம் -----------.<br>1. தை 2. ஆடி 3. ஆவணி 4. மார்கழி | 1 | 2 | 3 | 4 |
| 22. | தொற்றுநோய் என்பது ---------------.<br>1. cancer 2. decease 3. heart attack 4. Infection | 1 | 2 | 3 | 4 |
| 23. | சித்ரா வேலைகளைத் தானே -----------------<br>1. வந்தன. 2. செய்தோம். 3. செய்தன 4. செய்தாள். | 1 | 2 | 3 | 4 |
| 24. | village என்பது ---------------.<br>1. கிராமம் 2. நாடு 3. பட்டணம் 4. வீடு | 1 | 2 | 3 | 4 |
| 25. | பத்தொன்பதின் அடுத்த எண் ----------------.<br>1. 30 2. 20 3. 23 4. 22 | 1 | 2 | 3 | 4 |
| 26. | கேள்விக்கு ஏற்ற --------- எழுது<br>1. கேள்வி 2. விடை 3. பேச்சு 4. சொல் | 1 | 2 | 3 | 4 |
| 27. | ஒன்று பட்டால் உண்டு ------------ என்பது பழமொழி.<br>1. வாழ்வு 2. தாழ்வு 3. உயர்வு 4. மேடு | 1 | 2 | 3 | 4 |
| 28. | நான் நாளை பாடசாலைக்கு ---------------<br>1. வந்தோம் 2. வருகிறோம் 3. வருவோம் 4. வருவேன் | 1 | 2 | 3 | 4 |
| 29. | ------------------ மாடியிலிருந்து கீழே விழுந்தான்.<br>1. அது 2. அவை 3. அவர் 4. அவன் | 1 | 2 | 3 | 4 |
| 30. | ---------- கல்வி சிலையில் எழுத்து.<br>1. இம்மையில் 2. இளமையில் 3. வறுமையில் 4. முதுமையில் | 1 | 2 | 3 | 4 |

(30 புள்ளிகள்)

இறுதியாண்டுத் தேர்வு | தமிழ் மொழி | 
வகுப்பு 05 | 08-12-2007

**வினாக்கள்** வருடம்: 05

**1.பின்வரும் பந்தியை வாசித்துஇ கீழ்வரும் கேள்விகளுக்குப் பதில் எழுதுக.**

ஒரு மீனவன் கடலுக்கு மீன் பிடிக்கப் போனான். அவன் கடலில் வலையை வீசினான். வெகுநேரமாக அவன் வலையில் மீன்கள் சிக்கவில்லை. இருந்தும் பொறுமையாக இருந்தான். சற்றுநேரம் கழித்து வலையில் ஒரு சிறிய மீன் சிக்கியது. மீனவன் வலையில் சிக்கிய மீனைப் பிடிக்கக் கையை நீட்டினான். அந்த மீன் அவனைப் பார்த்து ஐயா! என்னை விட்டுவிடுங்கள். இப்போது நான் மிகவும் சிறிய மீனாக இருக்கிறேன். என்னால் உங்களுக்கு ஒரு பயனும் இல்லை. நான் பெரிய மீனாக வளர்ந்ததும் என்னை நீங்கள் பிடித்துக் கொள்ளலாம்' என்றது. மீன் சொன்னதைக் கேட்டு மீனவன் ஏமாறவில்லை. கையில் கிடைத்த மீனையும் விட விரும்பவில்லை. எனவே மீனைப் பிடித்து கூடையில் போட்டான்.

மீனவன் ஏன் கடலுக்குப் போனான்?

________________________________

வலையில் எது அகப்பட்டது?

________________________________

எப்போது தன்னைப் பிடித்துக் கொள்ளலாம் என மீன் கூறியது?

________________________________

மீன் சொன்னதை மீனவன் கேட்டானா?

________________________________

அவன் மீனை என்ன செய்தான்?

________________________________

(10 புள்ளிகள்)

**2. உமக்கு தெரிந்த சமையல் குறிப்பு ஒன்றைப் பற்றி எழுதுக. அதில் தேவையான பொருட்கள், செய்யும் முறைகள் போன்ற விபரங்கள் இருக்க வேண்டும். (60 - 70 சொற்கள்)**

________________________________

(10 புள்ளிகள்)

3. பொருத்தமான சொல்லின் கீழ் கீறிடுக.

ஓருநாள் இராணி நூல் நிலையத்திற்கு (சென்றாள், சென்றால்)

நான் காலையில் எழுந்து ( பல். பழ் ) துலக்குவேன்

பெரியவருடைய தலையில் அதிக ( நரை, நறை ) முடி இருந்தது

அவன் வரைந்த ஓவியத்தைப் பார்த்து அனைவரும் ( இறசித்தனர், இரசித்தனர் )

அவர் கொடுத்த தாளில் (அனைத்து, அணைத்து ) விபரங்களும் இருந்தன.

அந்த ஓய்வு ( அரை, அறையில் ) சென்று நான் ஓய்வெடுத்தேன்.

அந்தப் பெண் அங்கே ( பனி, பணி ) புரிபவள்

இரமா மிகவும் (அலகான, அழகான ) உடை அணிந்திருந்தாள்.

உடைந்த ( கண்ணாடி, கன்னாடி ) காலில் குத்தியது.

அவன் தன் நண்பனுக்கு ( வாழ்த்து, வால்த்து )க்கள் கூறினான்.

(10 புள்ளிகள்)

4. பின்வரும் பொதுஅறிவு வினாக்களுக்கு விடை தருக.

தமிழ் - ஆசிரியர் என்ற சொற்களை சேர்த்து எழுதினால் வருவது

________________________________________

விம்பிள்டன் டென்னிஸ் போட்டி எங்கு நடைபெறும்?

________________________________________

அவுஸ்திரேலியா நாட்டில் பிரதமர் பதவிக்கு போட்டியிட்ட இருவரின் பெயர்களைத் தருக

________________________________________

இலக்கம் இருபதையும், இலக்கம் பத்தையும் கூட்டினால் வரும் எண் என்ன?

________________________________________

நூற்றாண்டு என்ற சொல்லை பிரித்தெழுதுக.

________________________________________

ஒலிம்பிக் விளையாட்டு அடுத்த வருடம் எங்கு நடைபெறுகிறது?

________________________________________

விமானம் ஓட்டுபவர் எப்படி அழைக்கப்படுவார்.?

________________________________________

நியூசிலாந்து பிரதமரின் பெயர் என்ன?

________________________________________

அவுஸ்திரேலியா புதிய பிரதம மந்திரியின் பெயர் என்ன?

________________________________________

முட்செடி யைப் பிரித்து எழுதினால் வருவது?

________________________________________

(10 புள்ளிகள்)

5. மாறிக்கிடக்கும் சொற்களைக் கருத்தமைய மாற்றி சரியான வசனத்தில் அமைக்க.

நாடு - நாம் - வசிக்கும் - அவுஸ்திரேலியா

______________________________

சிறிய - அது - ஒரு - தீவு

______________________________

கடற்கரையில் - விளையாடிக்கொண்டு - பிள்ளைகள் - இருந்தார்கள்

______________________________

பல - உள்ளன - தொழிற்சாலைகள் - மெல்பேர்ணில்

______________________________

இங்கு - சேர்ந்து - பல - வாழ்கிறார்கள் - இன - மக்கள்

______________________________

(10 புள்ளிகள்)

6. உமது மாமா சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவரின் சுகங்கள் பற்றி விசாரித்து ஒரு கடிதம் எழுதவும்.

______________________________

(10 புள்ளிகள்)

7. பின்வரும் சொற்களை வைத்து வசனம் அமைக்க

தொடருந்து நிலையம்

சுற்றுலாப் பயணம்

நாட்டின் தலைவர்

கவிதை அரங்கம்

திருமண வாழ்த்து

(10 புள்ளிகள்)